**நோய் மேலாண்மை**

**நாற்றங்கால் பராமரிப்பு**

| | |
|---|---|
| விதை நேர்த்தி | விதைப்பதற்கு 24 மணி நேரத்திற்கு முன்பு விதைகளை கார்பன்டாசிம் அல்லது கேப்டான் அல்லது திரம் 1 கிலோ விதைக்கு 2 கிராம் என்ற விகிதத்தில் கலந்து விதை நேர்த்தி செய்யவேண்டும். |

**வயல் பராமரிப்பு**

| **நோய்களின் பெயர்** | **கட்டுப்படுத்தும் முறை** |
|---|---|
| துரு நோய்<br>*பக்சீனியா பர்பூரியா* | மேன்கோசெப் என்ற பூசணகொல்லியை 1 கிலோ என்ற அளவில் தெளிக்க வேண்டும். பத்து நாட்களுக்கு பிறகு அதே பூசணகொல்லியை மறுபடியும் தெளிக்க வேண்டும். |
| தேன் ஒழுகல் நோய்<br>*க்ளாவிசெப்ஸ் பர்பூரியா* | சோளக்கதிர்கள் மழைகாலம் மற்றும் கடுமையான குளிர்காலத்தில் அறுவடைக்கு வராமல் இருக்கும்படி, விதைக்கும் பருவத்தை மாற்றி விதைக்க வேண்டும்.<br>இரசாயன முறை<br>கீழ்காணும் பூசண கொல்லியில் ஏதாவது ஒன்றைக் கதிர்வரும் தருவாயிலும், பூக்கும் தருவாயிலும் மற்றும் தேவை ஏற்படினின் வாரத்திற்கு ஒரு முறையும் தெளித்தல் அவசியம். மேன்கோசெப் -ஹெக்டருக்கு 1000 கிராம் அல்லது புரொப்பிகோனசோல் - 500 மிலி தெளிக்கவேண்டும். |
| கதிர் பூசண நோய்<br>*ப்யூசேரியம், கர்வுலேரியா*<br>*ஆல்டெர்நேரியா, அஸ்பெர்சில்லஸ்* | மேன்கோசெப் (அல்லது) கேப்டான் 1000 கிராம் அல்லது ஆரியோபன்ஜின்சால் 100 கிராம் ஒரு எக்டருக்கு என்ற அளவில் கதிர் வெளிவரும் தருணத்தில் அல்லது விட்டுவிட்டு மழைபெய்யும் காலங்களில் தெளித்தல் வேண்டும். தேவை ஏற்படின் ஒருவார இடைவேளையில் மீண்டும் ஒரு முறை மேற்கண்ட பூசணக்கொல்லியை தெளிக்கவும். |
| அடிசாம்பல் நோய்<br>*பெரனோ ஸ்கிலிரோஸ்போரா சொர்கி* | **உழவியல் முறை**<br>நோய்தாக்கிய செடிகளை நாற்பத்தைந்து நாட்கள்வரை வயலில் இருந்து அப்புற படுத்துதல் வேண்டும்.<br>கீழ்கண்ட பூசணகொல்லிகளில் ஏதாவது ஒன்றை தெளிக்க வேண்டும்.<br>நேரடி நடவு மற்றும் நாற்றங்கால் நடவு இரண்டு முறைகளிலும் இலையில் அடிச்சாம்பல் நோய் அறிகுறிகள் தென்பட்டவுடன் ஹெக்டேருக்கு மெட்டலாக்சில் 500 கிராம் அல்லது மேன்கோசெப் 1000 கிராம் என்ற அளவில் தெளித்தல் வேண்டும். |
| கருகல் நோய்<br>*ஹெல்மின்தோஸ்போரியம் டர்சிகம்* | விதைகளை *டிரைக்கோடர்மா விரிடியை* (பூஞ்சாண உயிரியல் நோய் கட்டுப்பாடு) 4 கிராம் , 1 கிலோ விதை என்ற அளவில் விதை நேர்த்தி செய்தல் வேண்டும். |